நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## காடு வளர்ப்பு விழிப்புணர்வு முகாம்

First Published : 08 Mar 2012 11:36:06 AM IST

அரவக்குறிச்சி, மார்ச் 7: மத்திய சுற்றுச்சூழல் அமைச்சக நிதியுயுதவியுடன் நிலைத்த வாழ்வாதாரத்திற்கான காடுகள் பற்றிய விழிப்புணர்வு முகாம் இனுங்கனூர் நடுநிலைப் பள்ளியில் அண்மையில் நடைபெற்றது.

திண்டுக்கல் அமைதி அறக்கட்டளை, அரவக்குறிச்சி சபாடு தொண்டு நிறுவனம் இணைந்து நடத்திய முகாமிற்கு, பள்ளித் தலைமை ஆசிரியர் தனசேகரன் தலைமை வகித்தார். உதவித் தலைமை ஆசிரியர் பழனிசாமி பேசினார்.

காடுகளைப் பாதுகாக்க மாணவ- மாணவிகள் தங்களின் வீட்டின் அருகில் மரங்களை நட்டு வளர்ப்பது அவசியம் என சபாடு தொண்டு நிறுவனச் செயலர் பி. குணசேகரன் வலியுறுத்தினார்.

முகாமில் சுமார் 200 மாணவ, மாணவிகள், விவசாயிகள், மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். சபாடு ஒருங்கிணைப்பாளர் ஜெகதீசன் நன்றி தெரிவித்தார

## விதை கிராமத் திட்ட பயிற்சி

First Published : 08 Mar 2012 11:15:08 AM IST

குளித்தலை, மார்ச் 7: கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், நங்கவரம் பேரூராட்சிக்குள்பட்ட பகுதிகளில் விதை கிராமத் திட்டம் மூலம் பயறு வகைப் பயிர்களுக்கான பயிற்சி முகாம், வேளாண்மை துறை மூலம் அண்மையில் நடைபெற்றது.

நங்கவரம் பேரூராட்சிக்குள்பட்ட தென்கடைக்குறிச்சி, குறிச்சி ஆகிய பகுதிகளில் நடைபெற்ற முகாமுக்கு, குளித்தலை வட்ட வேளாண் உதவி இயக்குநர் க. சேகர் தலைமை வகித்தார்.

பயிற்சியில், விதைச் சான்று அலுவலர் இரா. தண்டபாணி, உதவி விதை அலுவலர் சு. கணேசன் ஆகியோர் பங்கேற்று, பயறு வகைப் பயிர்களைச் சாகுபடி செய்யும் முறை, அறுவடை, தரம்

பிரித்தல், சேமித்து வைத்தல், சந்தையிடுதல் பற்றி எடுத்துரைத்தனர். இதில் ஏராளமான விவசாயிகள் பங்கேற்றுப் பயிற்சி பெற்றனர்.

ஏற்பாடுகளை நங்கவரம் பகுதி உதவி வேளாண் அலுவலர் ச. சங்கர் செய்தார். குளித்தலை துணை வேளாண் அலுவலர் செ. வீரையா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## துல்லிய பண்ணையத் திட்டப் பயிற்சி

First Published : 08 Mar 2012 11:14:27 AM IST

கரூர், மார்ச் 7: கரூர் மாவட்டம், தோகைமலை அருகே விவசாயிகளுக்கு துல்லியப் பண்ணையத் திட்டப் பயிற்சி அண்மையில் நடைபெற்றது.

கரூர் மாவட்டம், தோகைமலை அருகேயுள்ள கள்ளையில் நடந்த பயிற்சிக்கு, கள்ளை ஊராட்சித் தலைவர் மாரியாயி நாகரத்தினம் தலைமை வகித்தார்.

தோட்டக்கலை உதவி இயக்குநர்கள் தோகைமலை சிந்தாமணி, கிருஷ்ணராயபுரம் ராஜேந்திரன், தோகைமலை வேளாண் உதவி இயக்குநர் (பொ) காதர்மொகிதீன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பயிற்சியில் சொட்டு நீர் பாசனம் அமைத்தல், அதற்கு அரசு தரும் மானியங்கள், கரும்பில், காய்கறிச் சாகுபடியில் துல்லிய பண்ணையம் அமைத்தல், சொட்டு நீர்ப் பாசன முறை, குழித் தட்டு நாற்றாங்கால், தொழில்நுட்பங்களைச் செயல்படுத்துதல் உள்ளிட்டவை குறித்து விளக்கப்பட்டது.

பின்னர், விவசாயிகளுக்கு மேலபுதுபட்டி வெள்ளைச்சாமி தோட்டத்தில் கத்தரி சாகுபடி முறை குறித்து நேரடி விளக்கம் அளித்தனர். இந்தப் பயிற்சியில் புழுதேரி அறிவியல் மையத் தொழில்நுட்ப வல்லுநர் தனசேகரன், உதவி வேளாண் அலுவலர்கள் மணிமாறன், கார்த்திகேயன், துணைத் தோட்டக்கலை உதவி அலுவலர் சவுந்தரபாண்டி, விவசாயிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## அறுவடைக்குப் பின் செய்நேர்த்தி பயிற்சி

First Published : 08 Mar 2012 11:14:54 AM IST

மதுரை,மார்ச் 7: விவசாயிகளுக்கு அறுவடைக்கு பின் செய்நேர்த்தி, சந்தை அறிவுத்திறன் உள்ளிட்ட தொழில்நுட்பப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இதுகுறித்து, வேளாண் விற்பனை வாரிய மதுரை மண்டல வேளாண் உதவி இயக்குநர் அலுவலகம் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

மதுரை உள்ளிட்ட தென்மாவட்டங்களில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில்

இந்தப் பயிற்சி நடத்தப்பட்டு வருகிறது.
தொழில்நுட்ப வல்லுநர்கள், வேளாண் விஞ்ஞானிகள், மத்திய அரசின் விற்பனை ஆய்வு இயக்கக அலுவலர்கள், அரசு சார்பற்ற தொண்டு நிறுவனப் பயிற்சியாளர்கள் இதில் பாடங்களை நடத்துகின்றனர்.
நெல், பயறு வகைகள், கரும்பு,சோளம், மஞ்சள்,பருத்தி மற்றும் எண்ணெய் வித்துகளை அறுவடை ப்ெசய்த பின் பாதுகாத்தல், மதிப்பு கூட்டுதல், தரம் பிரிப்பு,சந்தை வழி உற்பத்தி, குளிர்பதன வசதிகள் உள்ளிட்ட 11 வகையான தலைப்புகளில் பாடங்கள் நடத்தப்படுகின்றன.
மாவட்டத்தில் மதுரை,திருமங்கலம்,உசிலம்பட்டி,மேலூர், வாடிப்பட்டி பகுதிகளில் இந்த பயிற்சி வகுப்புகள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினமலர்
உண்மையின் உரைகல்

## இயற்கையை பாதுகாக்க அமைப்புகள் முன்வர வேண்டும்

பதிவு செய்த நாள் : மார்ச் 09,2012,00:57 IST

குன்னூர் : "இயற்கையை நேசித்து, அவற்றை பேணி காக்கும் பணியில் ஜேசிஐ போன்ற அமைப்புகள் ஈடுபட வேண்டும்', என வலியுறுத்தப்பட்டது.குன்னூர் ஜேசிஐ அமைப்பின் புதிய நிர்வாகிகள் பதவியேற்பு மற்றும் விருது வழங்கும் நிகழ்ச்சி குன்னூர் உபாசி அரங்கில் நடந்தது. முன்னாள் தலைவர் சிவலிங்கம் வரவேற்றார். சிறப்பு அழைப்பாளராக பங்கேற்ற ஊட்டி அரசு கலைக் கல்லூரி தமிழ்த்துறை தலைவர் டாக்டர். அழகர் ராமானுஜம் பேசுகையில்,""ஜேசிஐ போன்ற பொதுநல சேவையில் ஈடுபடும் அமைப்புகள், இயற்கையை பாதுகாக்கும் பணியில் தங்களை அதிகளவு ஈடுபடுத்தி கொள்ள வேண்டும்.
நீலகிரிக்கு வரும் சுற்றுலா பயணிகள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்," என்றார்.
ஜேசிஐ தலைவர் செந்திகுமார், தனது ஓராண்டு கால சாதனை, பணிகளை பட்டியலிட்டார். புதிய தலைவராக ஆனந்த், செயலராக சலீம், இணை செயலராக ராஜேஷ், பொருளாளராக ஸ்ரீவித்யா உட்பட நிர்வாகிகள் பொறுப்பேற்று கொண்டார்.
தொடர்ந்து, வெலிங்டன் கன்டோன்மென்ட் போர்டு துணைத் தலைவர் பாரதியார், பேரட்டி ஊராட்சி தலைவி ராஜேஸ்வரிதேவதாஸ், ராயல் கோர் டிரஸ்ட் நிர்வாகி உஷா, சமூக சேவகர் மலங்கு உட்பட தனிநபர்கள், குன்னூர் வியாபாரிகள் சங்கம் உட்பட அமைப்புகளுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

கோ்கம்பை ஹில்போர்ட் மெட்ரிக் பள்ளி முதல்வர் லட்சுமி நாராயணன், ஜேசிஐ மண்டல தலைவர் பாலசுப்ரமணியம்,செயலர் பழனியப்பன் உட்பட பலர் பேசினர். நுகர்வோர் பாதுகாப்பு சங்க தலைவர் மனோகரன், குன்னூர் வியாபாரிகள் சங்க தலைவர் பரமேஸ்வரன், செயலர் ரகீம், செயலர் முகமது சலீம் நன்றி கூறினார்.

## மரவள்ளி கிழங்குக்கு கொள்முதல் நிலையம்: விவசாயிகள் எதிர்பார்ப்பு

பதிவு செய்த நாள் : மார்ச் 09,2012,01:44 IST

கருத்தை பதிவு செய்ய

வேலாயுதம்பாளையம்: "மரவள்ளி கிழங்குக்கு தொடர்ந்து குறைந்த விலையே கிடைத்து வருவதால், வேலாயுதம்பாளையம் பகுதியில் அரசு தரப்பில் கொள்முதல் நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்' என விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.

கரூர் மாவட்டத்தில் வேலாயுதம்பாளையம், புகளூர், நொய்யல், சேமங்கி, மரவாப்பாளையம், புங்கோடை, குளத்து பாளையம், நடையனூர், தோட்டக்குறிச்சி , குந்தானி பாளையம், ஓலப்பாளையம், ஒரம்புபாளையம், கவுண்டன்புதூர், நல்லிகோவில் உள்ளிட்ட பகுதிகளில் 5,000 ஏக்கரில் மரவள்ளி கிழங்கு பயிரிடப்பட்டுள்ளது.

இந்த பகுதிகளில் விளையும் மரவள்ளி கிழங்கு நாமகிரிபேட்டை, ராசிபுரம், மலவேப்பங்கொட்டை, சேலம், ஆத்தூர், மல்லூர், நாமக்கல் உள்ளிட்ட பகுதிகளுக்கு ஜவ்வரிசி தயாரிக்க கொண்டு செல்லப்படுகிறது. கடந்தாண்டு ஒரு டன் மரவள்ளிகிழங்கு 14 ஆயிரம் ரூபாய் வரை விலை போனது.

கடந்த நவம்பர் மாதம் முதல் படிப்படியாக மரவள்ளி கிழங்குக்கு விலை குறைய துவங்கியது. நாளடைவில் ஒரு டன் மரவள்ளி கிழங்குக்கு நான்காயிரம் வரை மட்டுமே விலை கிடைத்தது. தற்போது ஒரு டன் மரவள்ளி கிழங்குக்கு 2,400 ரூபாய் மட்டுமே விலை கிடைக்கிறது.

இதுகுறித்து மரவள்ளி கிழங்கு விவசாயிகள் கூறுகையில், ""வேலாயுதம்பாளையம் பகுதியில் சாகுபடி செய்யப்படும் மரவள்ளி கிழங்குகள், பெரும்பாலும் இடைத்தரகர்கள் மூலம் விற்பனை செய்ய வேண்டிய நிலை உள்ளது. இதனால் இடைத்தரகர்கள் அடிமாடு விலைக்கு மரவள்ளி கிழங்கை கேட்கின்றனர். இடைத்தரகர்களின் தலையீட்டை தடுக்கவும், விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்கவும், வேலாயுதம்பாளையம் பகுதியில் மரவள்ளி கிழங்கை கொள்முதல் செய்யும் வகையில், அரசே கொள்முதல் நிலையத்தை அமைக்க வேண்டும்," என்று கூறுகின்றனர்.

## பாரம்பரிய தானியங்களில் சத்துக்கள் ஏராளம் :ஊட்டியில் நடந்த பயிலரங்கத்தில் தெளிவு

பதிவு செய்த நாள் : மார்ச் 09,2012,00:57 IST

கருத்தை பதிவு செய்ய

ஊட்டி : ""நமது பாரம்பரிய தானியங்களை பயிரிட வேண்டும்,' என பயிலரங்கத்தில் வலியுறுத்தப்பட்டது.

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், வனக்கல்லூரி மற்றும் இந்திய வேளாண் ஆராய்ச்சி குழுமம் சார்பில் முழுமையாக பயன்படுத்தாத பயிர்களை சாகுபடி செய்வது குறித்த ஒரு நாள் பயிலரங்கம் ஊட்டியில் நடந்தது.

ஊட்டி தோட்ட கலைத்துறை வளாகத்தில் நடந்த பயிலரங்கத்துக்கு வேளாண் பல்கலைக்கழக நிர்வாகக்குழு உறுப்பினர் அர்ஜூணன் தலைமை வகித்து பேசுகையில்,"" கூக்கல்தொரையில் 250 விவசாயிகள் பாரம்பரிய தானிய பயிர்களான ராகி, சம்பா, கோதுமை, சாமை, பாப்பரை மற்றும் கீரை வகைகளை பயிரிட்டு வருகின்றனர். இவர்களுக்கு விதைகள் வழங்கப்பட்டுள்ளன. இயற்கை வேளாண்மைக்கு உகந்த இடுபொருட்களான பஞ்சகாவ்யா, தசகாவ்யா, உயிர் உரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த திட்டத்தின் வெற்றியை தொடர்ந்து, வனவியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் மூலம் பழங்குடியின மக்கள் பயன்பெறும் வகையில் திட்டம் விரிவுப்படுத்தப்படும். மக்களுக்கு ஊட்டச்சத்து மிகுந்த ஆகாரம் கிடைக்க பல்வேறு வகையான கீரை விதைகள் வழங்கப்படும்,'' என்றார்.

வனவியல் கல்லூரி முதல்வர் துரைராசு பேசுகையில்,""நமது உணவு பழக்க மாற்றத்தால் ரத்த கொதிப்பு, இதய நோய்கள், சர்க்கரை நோய் ஆகியவற்றால் அவதிப்பட்டு வருகிறோம் பழங்குடியின மக்கள் வசிக்கும் கிராமங்களில் அடிப்படை வசதிகள் மேம்படுத்த புதிய திட்டங்கள் உருவாக்கப்பட்டு வருகிறது. நமது பாரம்பரிய தானியங்களை விவசாயிகள் பயிரிட வேண்டும். பனிவறகு, வறகு, சாமை, கம்பு மற்றும் கீரை வகைகளை பயிரிட வேண்டும். தண்டு கீரையில் நாம் கீரையை மட்டும் பயன்படுத்துகிறோம். இந்த கீரையின் விதையில் ஜிங்க், சோடியம், போட்டாசியம் மற்றும் புரத சத்துக்கள் உள்ளன. இந்த விதைகளை வெல்லத்துடன் இணைந்து சத்துணவு தயாரிக்கலாம்,'' என்றார்.

பழங்குடியின நலத்துறை இயக்குனர் கிரிதர் பேசுகையில், ""பழங்குடியின மக்கள் வசிக்கும் கிராமங்களில் விவசாயம், பிற வசதிகளை மேம்படுத்த திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இதனை அவர்களுக்கு கொண்டு சேர்க்கும் பணிகள் அவசியம்,'' என்றார். மலைப்பகுதி மேம்பாட்டு திட்ட இயக்குனர் சீனிவாச ரெட்டி, பழங்குடியின் ஆராய்ச்சி மைய இயக்குனர் மகேஸ்வரன் ஆகியோர் பங்கேற்றனர்.

## கொள்முதல் நெல்லை தரக்கட்டுப்பாடு அதிகாரி ஆய்வு

பதிவு செய்த நாள் : மார்ச் 09,2012,02:18 IST

கருத்தை பதிவு செய்ய

கோபிசெட்டிபாளையம்: எல்.பி. பி., நெல் அறுவடை இறுதியானதை தொடர்ந்து, கோபி பொலவகாளிபாளையம் நெல் கொள்முதல் நிலையத்தை, தரக்கட்டுபாட்டு அதிகாரி ஆய்வு செய்தார்.

கோபி சுற்று வட்டாரத்தில் நாதிபாளையம், கடுக்காம்பாளையம், பொம்மநாயக்கன் பாளையம், நாகதேவன்பாளையம், சந்திராபுரம், கூகலுார், வெள்ளாங்கோவில், அளுக்குளி, பொலவகாளிபாளையம், மொடச்சூர், கோட்டுபுள்ளாம்பாளையம், குள்ளம்பாளையம், வெள்ளாளபாளையம் ஆகிய பகுதிகள், எல்.பி.பி., மூலம் பாசனம் பெறுகின்றன. இப்பகுதியில், 30 ஆயிரம் ஏக்கரில் நெல் நடவு செய்யப்பட்டது. ஏ.எஸ்.டி., ஏ.டி.டி.,-45, ஏ.டி.டி.,- 39, ஏ.டி.டி.,-38, பி.பி.டி.,- 5204 (டீலக்ஸ் பொன்னி), ஐ.ஆர்.-20, கோ-43 மற்றும் குண்டு ரகம் நெல் ஆகியவை பயிரிடப்பட்டு, அறுவடை நடக்கிறது.

அறுவடை செய்யப்படும் நெல்லை, கோபி சுற்று வட்டாரத்தில் அமைக்கப்பட்டுள்ள, ஒன்பது நெல் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகள் விற்பனை செய்து வருகின்றனர். வெளி மார்க்கெட்டை விட, கொள்முதல் நிலையத்தில் கூடுதல் விலை கிடைப்பதால், நெல் வரத்து அதிகரித்துள்ளது. வியாபாரிகள் சிலரும், விவசாயிகள் பெயரை பயன்படுத்தி நெல் விற்பனை செய்கின்றனர். வியாபாரிகளின் தலையிட்டால் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டனர். வி.ஏ.ஓ., சான்றிதழ், சிட்டா நகல் உள்ளிட்ட ஆவணங்களுடன் வரும் விவசாயிகளிடம் இருந்து நெல் கொள்முதல் செய்யப்படுகிறது.

எல்.பி.பி., தடப்பள்ளி, அரக்கன்கோட்டை ஆகிய பாசனத்தில் நெல் அறுவடை பணி முடிந்து விட்டது. கடைமடை பகுதியில் மட்டுமே நெல் அறுவடை நடக்கிறது. நெல் அறுவடை இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளதை தொடர்ந்து, நெல் கொள்முதல் நிலையங்கள் சரியாக செயல்படுகிறதா; என நுகர்பொருள் வாணிப கிடங்கு அதிகாரிகள் கண்காணித்து வருகின்றனர்.

நெல் தரக்கட்டுபாட்டு அதிகாரி குமாரசாமி தலைமையிலான அதிகாரிகள் குழுவினர் நேற்று பொலவகாளிபாளையம் நெல் கொள்முதல் நிலையம் வந்தனர். அங்குள்ள நெல் மூட்டையில் இருந்து மாதிரிகளை சேகரித்தனர். உள்ளூர் நெல் மூட்டைகள்தானா அல்லது வெளியூர் நெல் மூட்டைகளா; என்பது குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

## விதை பரிசோதனை நிலையத்தில் ஆய்வு

பதிவு செய்த நாள் : மார்ச் 09,2012,01:49 IST

கருத்தை பதிவு செய்ய

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி விதை பரிசோதனை நிலையத்தில், கோவை விதைச்சான்று இணை இயக்குனர் தங்கராஜ் ஆய்வு செய்தார்.

கிருஷ்ணகிரியில், மாவட்ட விதை பரிசோதனை நிலையம் இயங்கி வருகிறது. இந்த நிலையத்தில், நடப்பாண்டில், 361 சான்று விதை மாதிரிகள், 830 ஆய்வாளர் விதை மாதிரிகள், 281 பணி விதை மாதிரிகள் பெறப்பட்டு இதில், 348 சான்று விதைமாதிரிகள், 816 ஆய்வாளர் விதை மாதிரிகள், 281 பணி விதை மாதிரிகள் சேர்த்து மொத்தம், 1,445 விதை மாதிரிகளுக்கு பகுப்பாய்வு முடிவறிக்கைகள் அனுப்பப்பட்டுள்ளது.

பரிசோதனை நிலையத்தில், கோவை விதைசான்று இணை இயக்குனர் தங்கராஜ் ஆய்வு மேற்கொண்டார். விதைகள் பரிசோதனை செய்யப்படும் முறைகளை பார்வையிட்ட இயக்குனர், பரிசோதனை நிலையத்தை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகளை வழங்கினார்.

விவசாயிகள் சாகுபடிக்கு தரமான விதைகளை பயன்படுத்தும்படியும், விதை உற்பத்தியாளர்கள், விதை விற்பனையாளர்கள் மற்றும் விவசாயிகள் பணிவிதை மாதிரிகளை இந்த நிலையத்துக்கு அனுப்பி விதைகளின் தரத்தை அறிந்து சாகுபடி செய்யுமாறு இயக்குனர் தங்கராஜ் விவசாயிகளுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

ஆய்வின் போது, கோவை விதைப்பகுப்பாய்வாளர் பழனிக்குமார், தர்மபுரி விதைபரிசோதனை அலுவலர் பெரியசாமி, விதைசான்று உதவி இயக்குனர்கள், விதை சான்று அலுவலர்கள் மற்றும் கிருஷ்ணகிரி விதை பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர் ஜான் லூர்து சேவியர் ஆகியோர் உடன் இருந்தனர்.

## இயற்கை விவசாயத்துக்கு மாற பிரசாரம்

பதிவு செய்த நாள் : மார்ச் 08,2012,23:37 IST

சூலூர் : ""வெளிநாட்டு வர்த்தகர்களிடம் இருந்து, விளை நிலங்களை, விவசாயத்தை காப்பாற்ற, விவசாயிகள் இயற்கை விவசாயத்துக்கு மாற வேண்டும்'' என, சூலூரில் நடந்த சுதேசி விழிப்புணர்வு பிரசாரத்தில் வலியுறுத்தப்பட்டது.

சுதேசி விழிப்புணர்வு இயக்கம் சார்பில், விழிப்புணர்வு யாத்திரை கோவையில் துவங்கியது. யாத்திரை சின்னியம்பாளையம், இருகூர், பள்ளபாளையம், கண்ணம்பாளையம் வழியாக, சூலூர் பஸ் ஸ்டாண்ட் வந்தது. வியாபாரிகள் சங்கத் தலைவர் சந்திரசேகரன் வரவேற்றார்.

சுதேசி இயக்கத்தின் மாநில அமைப்புச் செயலாளர் நம்பி நாராயணன் பேசியதாவது:
பார்லிமெண்டில் கொண்டு வரப்படும்"தேசிய தண்ணீர் கொள்கை' வரைவு மசோதாவால், நாட்டில் தண்ணீரை விலையில்லாமல் வாங்க முடியாத சூழ்நிலையை உருவாக்கும். தனியார் நிறுவனங்களுக்கு ஆதரவான இந்த மசோதாவை, மத்திய அரசு கைவிட வேண்டும். மரபணு மாற்றம் செய்யப்பட்ட கத்தரிக்காய், நெல் உள்ளிட்டவற்றை சாப்பிடும் மக்கள், சர்க்கரை நோய், மன அழுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.
சில்லரை வர்த்தகத்தில் அன்னிய முதலீடுகளை அனுமதித்தால், அமெரிக்கர்களுக்கு நாம் அடிமையாகி விடுவோம். வெளிநாட்டு வர்த்தகர்களிடமிருந்து விளை நிலங்களை, விவசாயத்தை காப்பாற்ற இயற்கை விவசாயத்துக்கு மாற வேண்டும். வெளிநாட்டு வங்கிகளில் உள்ள பல லட்சம் கோடி கறுப்பு பணத்தை மீட்க, நடவடிக்கை எடுக்க வேண்டும்.
இவ்வாறு, அவர் பேசினார்.
யாத்திரை நிர்வாகிகள் இளங்குமார் சம்பத், கல்யாணராமன், மு.க.புதூர் விவேகானந்தர் இளைஞர் சக்தி இயக்க தலைவர் சம்பத்குமார், வி.எச்.பி., மாவட்ட செயலாளர் வக்கீல் விஜய குமார், அசோக் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## வாசனைப் பயிர் பயிற்சி கருத்தரங்கு

பதிவு செய்த நாள் : மார்ச் 08,2012,22:58 IST

கருத்தை பதிவு செய்ய

தாண்டிக்குடி : தடியன்குடிசை தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம் மற்றும் வாசனைப் பயிர்கள் மேம்பாட்டு இயக்கம் சார்பில், வாசனைப் பயிர்களில் நவீன சாகுபடி தொழில்நுட்ப பயிற்சி நடந்தது.
பெரியகுளம் ஆராய்ச்சி நிலைய முதல்வர் பொன்னுச்சாமி முன்னிலை வகித்தார். தாண்டிக்குடி காபி ஆராய்ச்சி நிலைய ஸ்டீபன் டீ சாமுவேல், தோட்டக்கலை துணை இயக்குனர் ராஜாமுகமது, தோட்டக்கலை ஆராய்ச்சி நிலைய தலைவர்கள் ஆனந்தன், ராஜாங்கம், வாசனை பயிர்கள் வாரிய தொடர்பு அதிகாரி குமரேசன், வங்கி மேலாளார் ஸ்ரீதரன் பேசினர்.

கோவை வேளாண் பல்கலை முதல்வர் குமார் பேசியது:நடப்பு ஆண்டை தோட்டக்கலை ஆண்டாக மத்திய அரசு அறிவித்துள்ளது. இதன் மூலம் ஆராய்ச்சிக்கும், மேம்பாட்டுக்கும் கூடுதல் நிதியுதவி கிடைக்கும். மேலும் தடியன்குடிசை ஆராய்ச்சி நிலையத்தில் கூர்க், நாக்பூர், ரங்பூர் ஆரஞ்சு கன்று உற்பத்தி செய்யும் ஆய்வு முடிவுற்று, ஜூன் முதல் விவசாயிகளுக்கு வழங்கப்படும். தடியன்குடிசை ஆராய்ச்சி நிலையத்திற்கு வெளிநாட்டு விஞ்ஞானிகள் குழு இனி ஆண்டுதோறும் வரும். இதனால் உலக வரைபடத்தில் ஆராய்ச்சி நிலையம் பிரசித்தி பெறும், என்றார்.

**தேவாரம் பகுதி விவசாயிகள் மரவள்ளி சாகுபடியில் ஆர்வம்**

பதிவு செய்த நாள் : மார்ச் 08,2012,22:40 IST

கருத்தை பதிவு செய்ய

தேவாரம் : தேவாரம் பகுதி விவசாயிகள் மரவள்ளி சாகுபடியில் ஆர்வம் காட்டி வருகின்றனர். இதுவரை இப்பகுதியில் மட்டும் ஆயிரம் ஏக்கருக்கும் அதிக பரப்பில் மரவள்ளி சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

தேனி மாவட்டத்திலேயே தேவாரம் பகுதியில் அதிகளவு வறட்சி காணப்படுகிறது. எனவே வறட்சியை தாங்கி வளரக்கூடிய மரவள்ளி கிழங்கு சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். சேலம் பகுதியில் உள்ள ஜவ்வரிசி தொழிற்சாலை நிர்வாகத்தினர் தோட்டத்திலேயே வந்து கிலோ ஆறு ரூபாய் முதல் ஏழு ரூபாய் வரை விலைக்கு எடுத்துக் கொள்கின்றனர்.

---

தினகரன்

**விலை உயர்வை எதிர்பார்த்து ஏமாந்த மஞ்சள் விவசாயிகள் தாமதமாக துவங்கியது அறுவடை**

கருத்துகள்

பதிவு செய்த நேரம்:2012-03-09 10:00:19

தர்மபுரி: விலை உயர்வை எதிர்பார்த்த மஞ்சள் விவசாயிகள் ஏமாற்றமடைந்துள்ளனர். விளைந்த மஞ்சள் மீண்டும் முளைத்து விடும் நிலை ஏற்பட்டதால் தாமதாக அறுவடை பணிகள் துவங்கியுள்ளது.

தர்மபுரி மாவட்டத்தின் பல பகுதிகளில் 9 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் மஞ்சள் பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. 8 மாத பயிராக மஞ்சள் ஏக்கருக்கு 10 டன் வரை மகசூல் கிடைக்கிறது. கடந்த 2 ஆண்டுகளைவிட தற்போது மஞ்சள் விலை கடுமையாக சரிந்துள்ளது. விலை உயரும் என்ற எதிர்பார்ப்பில் விவசாயிகள் பலரும் மஞ்சளை இருப்பு வைத்துள்ளனர். சிலர் நன்கு விளைந்த மஞ்சளை அறுவடை செய்யாமல் உள்ளனர்.

அறுவடை செய்யாத மஞ்சளை அப்படியே விட்டுள்ளதால் முதிர்ச்சியடைந்து மீண்டும் முளைக்கும்

நிலை ஏற்பட்டுள்ளது. மஞ்சள் மார்க்கெட்டில் இப்போதைக்கு மஞ்சள் விலை உயர்வதற்கான அறுகுறி தெரியவில்லை. இதனால் விவசாயிகள் அறுவடை பணிகளை தாமதமாக செய்து வருகின்றனர். மஞ்சளுக்கு விலை நிர்ணயம் செய்யக்கோரி விவசாயிகள் ஆர்ப்பாட்டம் உள்ளிட்ட போராட்டங்களை நடத்தி வருகின்றனர். அரசு இதுவரை மஞ்சளுக்கு விலை நிர்ணயம் செய்யவில்லை.

இதுகுறித்து சேவியர்கொட்டாய் பகுதியைச் சேர்ந்த விவசாயி வேடியப்பன் கூறும்போது, ஜனவரி மாதம் மஞ்சள் அறுவடை தொடங்கி பிப்ரவரி இறுதியில் நிறைவு பெறும். தற்போது தாமதமாக மஞ்சள் அறுவடை செய்யப்படுகிறது. விலை உயரும் என்று எதிர்பார்த்து விவசாயிகள் பலரும் ஏமாந்துள்ளனர். 2 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த விலை நிலவரத்தை பார்த்து மஞ்சள் பயிரிட்ட விவசாயிகள் தற்போது ஏமாற்றமடைந்துள்ளனர் என்றார்.

பற்றாக்குறை

விவசாய பணிகளுக்கு கூலியாட்கள் கிடைப்பதில்லை. ஒரு நபருக்கு ஞ150 வீதம் கூலி கொடுத்து மஞ்சள் அறுவடைக்கு அழைத்து வரவேண்டிய நிலை உள்ளது. ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தில் கிராம மக்கள் பலரும் பணிபுரிவதால் விவசாயத்திற்கு ஆட்கள் கிடைப்பதில்லை. ஒருபுறம் வேளாண் பொருட்கள் விலை வீழ்ச்சி, மறுபுறம் பணியாளர் பற்றாக்குறை மற்றும் கூடுதல் கூலி வழங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் வேதனை தெரிவிக்கின்றனர்.

---

## *நெல், கோதுமை உற்பத்தி உயர்ந்ததால் உணவு தானியங்கள் கையிருப்பு 5.45 கோடி டன்னாக அதிகரிப்பு*



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு,புதுடெல்லி*

*நெல், கோதுமை உற்பத்தி மிகவும் அதிகரித்துள்ளது. இதன் காரணமாக, மார்ச் 1–ந் தேதி*

நிலவரப்படி மத்திய அரசின் உணவு தானியங்கள் கையிருப்பு 5.45 கோடி டன்னாக உயர்ந்துள்ளது.

இந்திய உணவு கழகம்

பொதுத் துறையைச் சேர்ந்த இந்திய உணவுக் கழகம் நெல், கோதுமை உள்ளிட்ட உணவு தானியங்களை விவசாயிகளிடம் கொள்முதல் செய்து வருகிறது. 2011–ஆம் ஆண்டு மார்ச் 1–ந் தேதி நிலவரப்படி இந்த நிறுவனத்திடம் இருந்த உணவு தானியங்கள் 4.60 கோடி டன்னாகும். இது, தற்போது 18 சதவீதம் அதிகரித்துள்ளது.

இதில், கோதுமை கையிருப்பு மட்டும் 24 சதவீதம் அதிகரித்து 1.72 கோடி டன்னிலிருந்து 2.12 கோடி டன்னாக உயர்ந்துள்ளது. அரிசி கையிருப்பு 15 சதவீதம் அதிகரித்து 2.87 கோடி டன்னிலிருந்து 3.32 கோடி டன்னாக உயர்ந்துள்ளது. மொத்த உணவு தானியங்கள் கையிருப்பில் அரிசியின் அளவு மட்டும் 61 சதவீதம் என்பது குறிப்பிடத்தக்கது.

மக்காச்சோளம்

அரிசி, கோதுமை கையிருப்பு உயர்ந்துள்ள நிலையில், மக்காச்சோளம் உள்ளிட்ட இதர தானியங்கள் கையிருப்பு 1.29 லட்சம் டன்னிலிருந்து 28 சதவீதம் குறைந்து 93,000 டன்னாக குறைந்துள்ளது. அரசு விதிமுறைப்படி, இந்திய உணவு கழகத்திடம் அவசர தேவைக்காக ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 1–ந் தேதியன்று அரிசி, கோதுமை கையிருப்பு குறைந்தபட்சம் 2.12 கோடி டன் இருக்க வேண்டும். இவ்வாண்டு மார்ச் 1–ந் தேதி நிலவரப்படி இந்த கையிருப்பு சிறப்பான அளவில் உயர்ந்துள்ளது.

அமோக வளர்ச்சி

நெல், கோதுமை உள்ளிட்ட உணவு தானியங்கள் உற்பத்தியில் ஏற்பட்டுள்ள அமோக வளர்ச்சியே இதற்கு காரணமாகும். நடப்பு 2011–12 (ஜூலை –ஜூன்) வேளாண் பருவத்தில் உணவு தானியங்கள் உற்பத்தி, சென்ற பருவத்தைக் காட்டிலும் 2.3 சதவீதம் (24.48 கோடி டன்) உயர்ந்து 25.04 கோடி டன்னாக அதிகரிக்கும் என மத்திய வேளாண் துறை அமைச்சகத்தின் இரண்டாவது முன்கூட்டிய மதிப்பீடு தெரிவிக்கிறது.

இதில், அரிசி உற்பத்தி 9.60 கோடி டன்னிலிருந்து 7 சதவீதம் உயர்ந்து 10.28 கோடி டன்னாக உயர்ந்துள்ளது. கோதுமை உற்பத்தி 2 சதவீதம் அதிகரித்து 8.69 கோடி டன்னிலிருந்து 8.83 கோடி டன்னாக உயர்ந்துள்ளது. நாட்டின் கிழக்கு மாநிலங்களில் நெல் உற்பத்தி வியக்கத்தக்க வகையில் அதிகரித்ததையடுத்து, நடப்பு பருவத்தில் இதுவரை கண்டிராத வகையில் உணவு தானியங்கள் உற்பத்தி அதிகரிக்கும் என உணவு அமைச்சகத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சேமிப்பு கிடங்குகள்

உணவு தானியங்கள் உற்பத்தி உயர்ந்து வரும் நிலையில், சேமிப்பு கிடங்குகளில் இட வசதி குறைவாக இருப்பது மத்திய அரசுக்கு ஒரு சவாலாக உள்ளது. எனவே, இந்த வசதியை மேம்படுத்தும் வகையில் எதிர்வரும் மத்திய பட்ஜெட்டில் அதிக நிதி ஒதுக்க வேண்டும் என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

பணவீக்கத்தை கட்டுப்படுத்தும் வகையில் 2010 மார்ச் மாதத்திலிருந்து 2011 அக்டோபர் வரையிலான 20 மாத காலத்தில் பாரத ரிசர்வ் வங்கி முக்கிய கடன்களுக்கான வட்டியை 13 முறை உயர்த்தியது. இதனையடுத்து, நடப்பு நிதி ஆண்டின் மூன்றாவது காலாண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி கடந்த 11 காலாண்டுகளில் இல்லாத அளவிற்கு 6.1 சதவீதமாக குறைந்தது. நடப்பு நிதி ஆண்டில் இது கடந்த மூன்று ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு 6.9 சதவீதமாக சரிவடையும் என மத்திய புள்ளியல் துறை அதன் முதல் கட்ட மதிப்பீட்டில் தெரிவித்துள்ளது.

பருப்பு வகைகள்

அரிசி, உணவு தானியங்கள் உற்பத்தி அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ள நிலையில், பருப்பு வகைகள் உற்பத்தி 5.26 சதவீதம் குறைந்து 1.73 கோடி டன்னாக சரிவடையும் என முன்னறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. பருப்பு உற்பத்தி குறைந்து வருவதையடுத்து, இறக்குமதி அதிகரித்து வருகிறது. உலக அளவில் பருப்பு வகைகள் இறக்குமதியில் நம் நாட்டின் பங்கு 15 சதவீதமாக உள்ளது.

எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி 3.24 கோடி டன்னிலிருந்து 3.05 கோடி டன்னாக குறையும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

## வர்த்தக விதிமுறைகளை மீறியதாக கூறி கோழிக் கறிக்கு தடை விதித்ததால் இந்தியா மீது அமெரிக்கா அதிருப்தி



அமிதி சென்

புதுடெல்லி

வர்த்தக விதிமுறைகளை மீறியதாகக் கூறி அமெரிக்காவிலிருந்து இறக்குமதியாகும் கோழிக் கறிக்கு தடை விதித்ததால் இந்தியா மீது அமெரிக்கா அதிருப்தி அடைந்துள்ளது. இந்தப் பிரச்சினையை உலக வர்த்தக மையத்திடமும் எடுத்துச் சென்றுள்ளது.

பறவைக் காய்ச்சல்

கடந்த 2007 மார்ச் மாதம் பறவைக் காய்ச்சல் பாதிப்புக்குள்ளான சில நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் உயிருள்ள கோழிகள், வாத்து, வான்கோழி மற்றும் இதர சில பறவையின குஞ்சுகளுக்கு இந்தியா தடை விதித்தது. இந்த வகையில் அமெரிக்காவிலிருந்து வரும் பறவைகள் மற்றும் இறைச்சிக்கும் தடை விதிக்கப்பட்டது. அதற்கு பிறகு பலமுறை அமெரிக்கா இந்த தடைக்கு உரிய விளக்கும் அளிக்குமாறு கோரியும் இந்தியா அறிவியல்ரீதியாக ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணத்தை கூறவில்லை என்று அமெரிக்க வர்த்தக பிரதிநிதி ரான் கிர்க் கூறியுள்ளார்.

"நியாயமற்ற விலங்கின சுகாதாரப் பிரச்சினைகளை எழுப்பி அமெரிக்க இறைச்சிப் பொருள்களுக்கு இந்தியா தடை விதித்துள்ளது. இது மறைமுக வர்த்தக கட்டுப்பாடு ஆகும். வேளாண் பாதுகாப்பை பொறுத்தவரை உலகிலேயே அமெரிக்காதான் முதலிடத்தில் உள்ளது. இந்த நிலையில் உலக வர்த்தக மையம் எமது கோரிக்கை நியாயமானது என்பதை உறுதி செய்யும் என நம்புகிறோம்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

கோழி போன்ற பறவைகளின் இறைச்சி மற்றும் இறைச்சிப் பொருள்கள் ஏற்றுமதியில் அமெரிக்கா இரண்டாவது இடத்தில் உள்ளது. சென்ற ஆண்டில் மட்டும் 500 கோடி டாலருக்கு இறைச்சிப் பொருள்களை ஏற்றுமதி செய்துள்ளது. இந்தியாவில் கோழி உள்ளிட்ட பறவையினங்களின் விற்பனை வாயிலான வருவாய் ஆண்டிற்கு 300 கோடி டாலராக (சுமார் ரூ.15,000 கோடி) உள்ளது. எனவே இந்த சந்தையின் மீது அமெரிக்கா ஒரு கண் வைத்துள்ளது. இந்தியாவின் தடையால் அமெரிக்காவின் இறைச்சி வர்த்தகம் பாதிக்கப்படுகிறது.

சாதகமான நிலைப்பாடு

இந்நிலையில் உலக வர்த்தக மையம் இந்தப் பிரச்சினையில் அமெரிக்காவிற்கு சாதகமான நிலைப்பாட்டை எடுத்தால் அமெரிக்க இறைச்சி மீதான தடையை இந்தியா நீக்க வேண்டியிருக்கும். இந்தியா அதற்கு உடன்பட மறுக்கும் பட்சத்தில் இந்தியாவிலிருந்து இறக்குமதியாகும் பொருள்கள் மீது கட்டுப்பாடுகளை விதிக்க அமெரிக்காவிற்கு உலக வர்த்தக மையம் அனுமதி அளிக்க வாய்ப்புள்ளது.